செய்தி வெளியீட்டு எண்—70 நாள்—22.1.2010

**தமிழகத்தில் வாகன வடிவமைப்பு மற்றும் பரிசோதனை கட்டமைப்புள்ள வாகன உற்பத்தி தொழிற்சாலையை தமிழகத்தில் தொடங்குவது குறித்து மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் தலைவர் திரு. பவான் கோயங்கோ அவர்கள்**

# மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் ஆலோசனை

* * * * * * * * *

**மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை இன்று (22.1.2010) தலைமைச் செயலகத்தில், மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் தலைவர் திரு. பவான் கோயங்கோ அவர்கள் சந்தித்து பேசினார். மகேந்திரா & மகேந்திரா நிறுவனம் வாகனங்கள், ட்ராக்டர்கள், ஆட்டோ உதிரிபாகங்கள், இரும்பு, தகவல் தொழில் நுட்பம் உள்கட்டமைப்பு, சிறப்பு பொருளாதார மண்டலம் போன்ற தொழில்களில் முன்னோடி நிறுவனமாக விளங்கி வருகிறது. வாகன உற்பத்தியில் இந்திய அளவில் 4 வது இடம் வகிக்கிறது. இந்நிறுவனம் தனது வடிவமைப்பு மற்றும் பரிசோதனை கட்டமைப்புள்ள வாகன உற்பத்தி திட்டத்தை தமிழகத்தில் தொடங்குவதற்கு முன்னர் பல்வேறு மாநிலங்களில் இடங்களை பார்த்து ஆய்வு மேற்கொண்டது. முதலீட்டிற்கு தகுந்த சூழ்நிலையும், அரசின் முற்போக்கு கொள்கைகளாலும், தமிழ்நாட்டில் இத்தொழிற்சாலையினை நிறுவ மகேந்திரா & மகேந்திரா நிறுவனம் முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்காக 5 ஆண்டுகளில் 1800 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது. இத்தொழிற்சாலையின் மூலமாக சுமார் 2500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். வாகன உற்பத்தித் திட்டம் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள செய்யாறு சிப்காட் தொழில் வளாகத்திலும், வடிவமைப்பு மற்றும் பரிசோதனை கட்டமைப்புத் திட்டம் சென்னை அருகில் மறைமலைநகர் மகேந்திரா வோல்ட் சிட்டியிலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்திற்கு தமிழக அரசு முழுஒத்துழைப்பு அளிக்கும் என்று மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் தலைவர் திரு. பவான் கோயங்கோ அவர்களிடம் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் தொழில் துறை செயலாளர் திரு. ராஜீவ் ரஞ்சன், துணை முதலமைச்சரின் செயலாளர் திரு. கே.தீனபந்து மற்றும் மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

* * * * * *

**வெளியீடு— இயக்குநர், செ.ம.தொ., தலைமைச் செயலகம், சென்னை—9.**